**மொனறாகலை, புத்தள ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம் - 2014**

---

மொனறாகலை, புத்தள ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பெல்சியத்தின் கேபிசீ வங்கி என்வீ இற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2014 யூன் 16 ஆந் திகதிய கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மொனறாகலை மற்றும் புத்தள நகரங்கள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள 50,000 வீட்டுடமையையாளர்களிற்கும் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளிலுள்ள ஏனைய நுகர்வோரிற்கும் முன்னேற்றப்பட்ட நீர் வழங்கலை வழங்குவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 5,545.48 மில்லியனிற்கு சமமான யூரோ 31.41 மில்லியன் தொகையாகும். அதில் கடனாக ரூபா 2,291.76 மில்லியனிற்கு சமமான யூரோ 13 மில்லியனும் பெல்சியத்தின் ஏற்றுமதி பகுதியின் கீழ் மானியமாக ரூபா 353.27 மில்லியனிற்கு சமமான யூரோ 02 மில்லியன் பெல்சியத்தின் கேபிசீ வங்கி என்வீ ஆல் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ஹட்டன் நஷினல் வங்கி ரூபா 1,590.45 மில்லியனிற்கு சமமான யூரோ 8.98 மில்லியன் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 திசெம்பர் 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான

தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தல்களிற்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளும் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஒஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு 2015 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஆகஸ்ட் 30 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசங்க கொள்வனவு வழிகாட்டல் 2006 இன் 8.9.3 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டத்தின் மாதிரி ஒப்பந்த உடன்படிக்கை வரிசை அமைச்சின் செயலாளரால் கைசாத்திடப்பட வேண்டுமென வேண்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் மாதிரி ஒப்பந்த உடன்படிக்கை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலவரால் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் கொள்வனவு வழகாட்டலின் 13 குறைநிரப்பு என்பவற்றின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் பதியப்பட வேண்டும். மேலும், ஒப்பந்தம் வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளருடன் உடன்படிக்கைகள் பதியப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் ஈடுபட்ட ஒப்பந்தகாரர் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 4.24 மில்லியன் பெறுமதியான நடைபெறும் வேலைகளின் பெறுமதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பதிவேடுகளில் காட்டப்பட்ட ரூபா 4.74 தொகையான நடைபெறும் வேலைகளின் நேரொத்த பெறுமதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| ------------ | ------------ | ------------ | -------------- | ------------ | ------------ |
| | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் |
| கேபீசீ - கடன் | 13.00 | 2,291.76 | 550 | | |
| - மானியம் | 2.00 | 353.27 | | 2.99 | 478.04 |
| ஹற்றன் நசனல் வங்கி | 8.98 | 1,590.45 | - | 1.81 | 286.18 |
| இலங்கை அரசாங்கம் | 7.43 | 1,310.00 | - | 0.03 | 4.23 |
| | ------- | ---------- | ---------- | --------- | ----------- |
| **மொத்தம்** | **31.41** | **5,545.48** | **550** | **4.83** | **768.45** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகர்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்துதல் மீது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் துணைநிலை கடன் உடன்படிக்கையொன்று கைசாத்திடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆகவே, மீளாய்வாண்டின பேது பெறப்பட்ட ரூபா 764.24 மில்லியன் கூட்டுத் தொகையான பெறுகைகள் தவறாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 114.64 மில்லியன் தொகையான கடன்கள் மற்றும் ரூபா 649.61 மில்லியன் தொகையான மானிய பெறுகைகளாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 482.25 மில்லியன் மற்றும் ரூபா 291.22 மில்லியன் தொகையான முறையே கடன்கள் மற்றும் மானிய பெறுகைகள் பெறப்பட்டிருந்தது.

(ஆ) பட்டியலிடப்பட்டுள்ள காலப் பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்கள் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் முழுக் காலப்பகுதியையும் மேவி மாதாந்த, காலாண்டு, அரையாண்டு போன்றவற்றில் நிர்ணயிக்க்பபட்ட பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டி ஒட்டுமொத்த விரிவான செயல் நடவடிக்கை திட்டமொன்று இருக்க வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் அத்தகைய திட்டமொன்று தயாரித்து அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ரூபா 3,100.50 மில்லியனிற்கு சமமான யூரோ 20.67 மில்லியன் கிரயத்தில் செய்யப்பட்ட சிவில் வேலைகள் மீதான பொறியியலாளர் மதிப்பீடுகள் பின்னர் ரூபா 2,950.50 மில்லியனிற்கு சமமான யூரோ 19.67 மில்லியனிற்கு திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் ரூபா 3,597 மில்லியனிற்கு சமமான யூரோ 23.98 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் குறைநிரப்பு- 23 இன் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம், அன்செலிட்டட் ஒப்பந்தங்களின் கீழான நிதியளிப்பு நிபந்தனைகள் 03 ஆண்டுகள் தள்ளுபடி காலப்பகுதி உள்ளடங்கலாக குறைந்தது 15 ஆண்டுகள்

திருப்பிச் செலுத்துதல் காலப்பகுதியில் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் கைச்சாத்திடப்பட்ட அன்செலிட்டட் உப்பந்த உடன்படிக்கை 06 மாதங்கள் தள்ளுபடி காலப்பகுதி உள்ளடங்கலாக 03 ½ ஆண்டுகள் காலப்பகுதியை கொண்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் ஆவணங்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது தொடங்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட புத்தள நீருற்பத்தி மற்றும் நிலத்தடி நீர்த் தேக்கங்கள், அலுவலக மற்றும் நிர்வாக கட்டிடங்கள், உத்தியோகபூர்வ விடுதிகள் என்பவற்றின் நிர்மாண வேலைகள், மற்றும் விநியோக நோக்ககங்களிற்கான குழாய்கள் பொருத்ததல் போன்றன உரிய வேலைகளிற்காக ஒப்பந்தகாரர்களை தெரிவுசெய்யப்பட்ட போதிலும் 2014 திசெம்பர் 31 வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3. நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 626 இல் வேண்டப்பட்டவாறு, செயற்திட்டத்தால் பேணப்பட்ட புறம்பான கணக்கீட்டு பதிவேடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட வேண்டுகைக்கு முரணாக, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பொது காசுப் புத்தகம் செயற்திட்டத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை பதிவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1988 திசெம்பர் 31 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் நிலையான சொத்துப் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.